


**14. 07. 2026**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழகத்தில் மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் ஆயிரத்து 393 பேருக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் திரு. விஜய் இன்று வழங்கினார்

2. சாலை விபத்துகளை தடுக்க 10 ஆண்டு செயல் திட்டத்திற்கு மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

3. உப்பூர் அனல் மின் நிலையத்தை மீண்டும் செயல்படுத்துவதற்கான ஆய்வு விரைவில் மேற்கொள்ளப்படும் என்று மாநில எரிசக்தி துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் தெரிவித்தார்.

4. ஈரோடு மாவட்டம் பவானி சாகர் அணையிலிருந்து காளிங்கராயன் வாய்க்கால் பாசனத்திற்காக இன்று தண்ணீர் திறக்கப்பட்டது.

5. இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

***************

முதலமைச்சர்

தமிழகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் 751 உதவி மருத்துவ அலுவலர்கள் மற்றும் ஆயிரத்து 393 சுகாதார ஆய்வாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் திரு.விஜய் இன்று வழங்கினார்.

140 கோடி ரூபாய் மதிப்பிலான மருத்துவ கட்டிடங்கள் மற்றும் நவீன உபகரணங்களின் செயல்பாட்டை துவக்கிவைத்த முதலமைச்சர் "நலம் TN" இணையதளத்தையும் அறிமுகம் செய்தார்..

இதற்கான இலட்சினையையும் முதலமைச்சர் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.அருண்ராஜ் பொதுமக்கள் தமிழ்நாடு அரசு மருத்துவமனை மேம்பாட்டிற்காக நிதி வழங்கும் வகையில் "நலம் TN" இணையதளம் தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

அரசு மருத்துவமனைகளின் கட்டமைப்புகளை மேம்படுத்த, மக்கள் கொடுக்கும் நிதி வெளிப்படைத்தன்மையுடன் பயன்படுத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

வாய்ஸ்

***************

முதலமைச்சர் - நெடுஞ்சாலை

தமிழகத்தில் சாலை விபத்துகளை தடுக்க 10 ஆண்டுகளுக்கான தனி செயல் திட்டத்தை மேற்கொள்ள முதலமைச்சர் திரு.விஜய் இன்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற நெடுஞ்சாலைத்துறை தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் மாநிலத்தில் அதி விரைவு சாலைகளை அமைக்கும் திட்டத்தை விரைவில் தீட்டவும் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

நகர்புற வளர்ச்சியை அடிப்படையாக கொண்டு சாலை உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் முதலமைச்சர் ஆணை பிறப்பித்துள்ளார்.

***************

<u>பால்வளம்</u>

தமிழகத்தில் கால்நடை மற்றும் பால்வளத்துறையினருடன் பட்ஜெட் தொடர்பான ஆலோசனைகள் முதலமைச்சர் தலைமையில் இன்று நடைபெற்றது.

சென்னை தலைமை செயலகத்தில் இன்று நடைபெற்ற இந்த கூட்டத்தில் ஆவின் பால் கொள்முதல் பால் விநியோகம், உள்ளிட்ட தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் ஆலோசனைகள் இடம்பெற்றன.

கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கமலி, பால்வளத்துறை அமைச்சர் விஜயலெட்சுமி உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

***************

<u>அஷ்விணி வைஷ்ணவ்</u>

சரக்கு பெட்டகங்களில் இனி உரங்களை கொண்டு செல்லலாம் என்று ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நிலக்கரி தூள் கொண்டுசெல்வதற்காக தனி பெட்டகம் வடிவமைக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

தற்போது ஆண்டொன்றுக்கு 340 மில்லியன் மெட்ரிக் டன் நிலக்கரி தூள் உற்பத்தி ஆவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ரயில்வே கட்டமைப்பு துறையில் பல்வேறு சீர்திருத்தங்களை கொண்டுவரப்பட்டுள்ளதாக கூறிய அமைச்சர், நிலம் கையகப்படுத்தும் நடைமுறைகளுக்காக ரயில் பூமி இணையதளம் விரைவில் அறிமுகம் செய்யப்படும் என்றார்.

உணவு தானிய போக்குவரத்தில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டதை அடுத்து பருப்பு வகைகளும் தானியங்களிலும் பூஞ்சை தொற்று இன்றி கொண்டு செல்ல வகை செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

***************

<u>கிரிராஜ் சிங்</u>

பிரதமரின் தொலைநோக்கு கனவே பாரத் டெக்ஸ் சர்வதேச ஜவுளி கண்காட்சி என்று மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் இந்த கண்காட்சியை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், இது சர்வதேச நிகழ்வாக உருவெடுத்துள்ளதோடு வாங்குவோர், விற்பனையாளர்கள் நுகர்வோர், பார்வையாளர்கள் அரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

இந்த ஆண்டு 130 நாடுகளை சேர்ந்த வர்த்தகர்கள் இதில் பங்கேற்றிருப்பதாக அவர் எடுத்துரைத்தார்.

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களும், தொழில் முனைவோரும் இந்நிகழ்வில் தற்போது பங்கேற்பதாக கூறினார்.

பல்வேறு நாடுகளுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களால் ஜவுளித்துறை பெரிதும் பயனடைந்து வருவதாக குறிப்பிட்டார்.

ஜவுளித்துறை இணை அமைச்சர் திரு. பபித்ரா மார்கரேட்டா பல்வேறு மாநிலங்களின் ஜவுளித்துறை அமைச்சர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

ஜவுளித்துறையில் இந்தியாவின் உலகளாவிய தலைமைத்துவ நிபுணத்துவத்தை பறைசாற்றும் தளமாக இந்த நிகழ்வு திகழ்கிறது.

***************

நிர்மல் குமார்

ராமநாதபுரம் மாவட்டம் உப்பூர் அனல் மின் நிலையத்தை மீண்டும் செயல்படுத்துவது குறித்து இன்னும் ஒருவாரத்தில் ஆய்வு செய்யப்படும் என்று மாநில எரிசக்தி துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் தெரிவித்தார்.

சென்னையில் மின்வாரிய தலைமை அலுவலகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், தமிழ்நாட்டில் மின்தட்டுப்பாடு இல்லை என்றும், கடந்த ஒருவாரத்தில் வெப்பநிலை அதிகரித்ததால், மின்தேவையும் அதிகரித்ததாக எடுத்துரைத்தார்.

மின்வாரியம் தனியார் மயமாக்கப்பட மாட்டாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எண்ணூர் வடசென்னை அனல் மின் நிலையத்தால் அப்பகுதி மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதை தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

தமிழகத்தில் இருமொழிக்கொள்கை தொடரும் என்றும் அதில் எந்த மாற்றமும் இருக்காது என்றும் அவர் கூறினார்.

அரசு வழக்கறிஞர்கள் நியமனம் ஒரு சில பகுதிகளில் மட்டும் நிலுவையில் உள்ளதாக கூறினார்.

***************

வியட்நாம்

வியட்நாம் படகுவிபத்தில் உயிரிழந்தவர்களில் திருச்சியை சேர்ந்த மூவரின் உடல்கள் இன்று கோவை விமான நிலையம் வந்தடைந்தது.

சாலைமார்க்கமாக இந்த உடல்கள் திருச்சிக்கு கொண்டு வரப்பட்டன.

மேலும் 3 பேரின் உடல்கள் இன்றுமாலை கோவை விமான நிலையம் கொண்டுவரப்படுகிறது.

சென்னையிலிருந்து வேலூரை சேர்ந்த ஒருவரின் உடலும் இன்று சாலை மார்க்கமாக கொண்டு செல்லப்பட்டது.

வியட்நாம் விபத்தில் உயிரிழந்த தமிழகத்தை சேர்ந்த 10 பேரின் உடல்களும் இன்று சென்னை விமான நிலையம் வந்தடைந்த நிலையில் சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

***************

<u>இருவரி</u>

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஆதார் பதிவு சேவைகள் தொடர்பாக பொதுமக்களிடம் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட்டால் சம்மந்தப்பட்ட இ-சேவை மையத்தின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி பத்மஜா எச்சரித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் 6 ஆம் வகுப்பு முதல் 12ஆம்வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கான கட்டுரை மற்றும் பேச்சுபோட்டிகள் நாளை நடைபெறுகின்றன.

அரியலூர் மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் ஆகஸ்ட் ஒன்றாம் தேதி தொடங்க உள்ளதால் கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என ஆட்சித்தலைவர் திருமதி மிருணாளினி தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்திலும் திருப்பூர் மாவட்டம் தாராபுரத்திலும் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் நாளை பொதுமக்கள் கோரிக்கை மனுக்களை வழங்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் 8-வது மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் இருகட்டங்களாக நடைபெறுவதை ஒட்டி இதுதொடர்பான விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திருமதி. ஷரண்யா அறி இன்று கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

சேலத்தில் மத்திய அரசின் தனித்துவ ஆணையத்தின் கீழ் புதிய ஆதார் சேவை மையம்; இன்று செயல்பாட்டிற்கு வந்தது.

***************

<u>கண்டன ஆர்பாட்டம்</u>

உதகை மற்றும் சுற்றுப்புற 11 கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வலியுறுத்தி இன்று கண்டன ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தும்மனட்டி, கப்பச்சி, கேந்துரை, மைனலை, மடித்துறை, உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த தேயிலை மற்றும் காய்கறி விவசாயிகள் 300க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றனர்.

***************

<u>ஈரோடு தண்ணீர் திறப்பு</u>

ஈரோடு மாவட்டம் பவானி சாகர் அணையிலிருந்து காளிங்கராயன் வாய்க்கால் பகுதி பாசனத்திற்காக இன்று தண்ணீர் திறக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***************

<u>கோவில்</u>

தஞ்சை அருள்மிகு பெருவுடையார் திருக்கோவிலில் நடைபெறும் ஆஷாட நவராத்திரி 10 நாள் திருவிழாவை ஒட்டி வராஹி அம்மனுக்கு இன்றுமாலை மஞ்சள் அலங்காரம், நடைபெறுகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

***************

## கிரிக்கெட்

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி பர்மிங்ஹாமில் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடங்குகிறது.

***************

## கால்பந்து

அமெரிக்க ஆர்லிங்டனில், FIFA உலக கோப்பை கால்பந்து போட்டியின் முதல் அரையிறுதி ஆட்டத்தில், ஃபிரான்ஸ் – ஸ்பெயின் அணியை நள்ளிரவு 12.30 மணிக்கு இன்று எதிர்கொள்கிறது.

***************

## பேட்மிண்டன்

ஜப்பான் ஓப்பன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு பி.வி.சிந்து முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆட்டத்தில் சிந்து – மலேசியாவின் **Ling Ching Wong –**ஐ 21-14 21-11 என்ற நேர் செட்களில் வென்றார்.

***************